**நீர்கொழும்பு மாநகர சபை - 2022**

-------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

நீர்கொழும்பு மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, நீர்கொழும்பு மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிருவாகத்துக்குரிய கணக்கீட்டு அலுவல்கள் தொடர்பாக விதி 141(i) விதிக்கும், நியமத்தின் 5.1(அ) பந்திக்கும், விதி 156 மற்றும் நியமம் 6.2 பந்திகளுக்கு முரணாக சபையினால் 2022 ஆண்டின் போது ரூபா 432,900 இற்காக கொள்வனவு செய்திருந்த இருப்புகள் என இனங்காணப்பட வேண்டிய 12 விடயங்கள் ஆதனங்கள், பொறித் தொகுதிகள் என இனங் கண்டிருந்தது. | எதிர் காலத்தில் இவ்வாறான வழுக்கல் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விதிகளின் படி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் பின் இணைப்பு 2 இல் விரிவான விளக்கமளித்தலின் EG 6.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முதலீட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் கிடைத்திருந்த நிதிப் பாய்ச்சல் சமர்ப்பிக்கும் முறைக்கு முரணாக நடைமுறை அல்லாத முதலீடுகளின் வருட ஆரம்ப மீதியில் மற்றும் இறுதி மீதியில் ரூபா 38,511,110 தொகைக்கான வித்தியாசம் முதலீட்டுக்காக பணம் ஈடுபடுத்தல் என காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | நியமத்தின் படி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நியமத்தின் பின் இணைப்பு 2 இல் விரிவான விளக்கமளித்தலின் EG 6.3 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சபையின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 27,839,546 இற்கான கடன் வழங்கலும் ரூபா 23,025,194 இற்கான தவணைப் பணம் மற்றும் ரூபா 4,161,336 இற்கான வட்டி அறவீடு செய்தலும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்தப் பெறுமதி முதலீட்டுத் தொழிற்பாடுகள் என காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | நியம இலக்கம் 9.9 மற்றும் இலக்கம் 9.14 பந்திகளுக்கு முரணாக மீளாய்வாண்டில் வருமானம் என இனங் கண்டிருக்காத மூலதனச் செலவுக் படி ரூபா 85,302,075 தொகை உரிமை மூலதனத்தின் கீழ் காட்டப்படாமல் குறுகிய கால செலுத்த வேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் போது ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் ரூபா 10,547,709 தொகை எனினும், முதலீட்டுத் தொழிற்பாடுகள் மூலம் காசுப்பாய்ச்சலின் கீழ் அது ரூபா 68,173,261 தொகை என காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது LG 41/3 படிவத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தில் விளக்கத்துடனான படிவத்தின் FS 3 இன் படி சபையின் 2022 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்கள் மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் முன்னைய ஆண்டின் அகழ் விரிவான வருமானம் சீராக்கல் செய்வதற்கு முன்னர் திரண்ட மிகை ரூபா 130,740,449 தொகை என காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், அது ரூபா 112,444,953 தொகை என காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | தேறிய சொத்துக்கள் மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றங்கள் மற்றும் முழுக் காலப் பகுதியிலுமான தவறுகளை சீராக்கல் மேற்கொள்ளும் தேறிய பெறுமதி ரூபா 34,820,120 தொகை எனினும், அது ரூபா 53,115,616 தொகை என காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | நியமத்தின் பின்னிணைப்பு 02 விரிவாக விளக்கமளித்தல் EG 6.2 பிரகாரம் செயற்பாட்டுத் தொழிற்பாடுகள் மூலமான நிதிப்பாய்ச்சலை கணிக்கும் போது நடைமுறை பொறுப்புக்களில் ரூபா 18,792,746 இற்கான வித்தியாசத்தை சபையினால் ரூபா 37,549,122 தொகை என காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | நியமத்தின் பின்இணைப்பு 02 விரிவாக விளக்கமளித்தல் EG 6.4 பிரகாரம் நிதித் தொழில்பாடுகள் மூலமான காசுப் பாய்ச்சல் கணிக்கும் போது மூலதன மாணியங்கள் என ரூபா 36,110,911 தொகை கிடைத்திருந்த போதிலும், ரூபா 48,072,182 தொகையென ரூபா 11,961,271 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது ரூபா 31,176,000 தொகைக்கான நீண்ட கால கடன் பெறல் காசுப் பாய்ச்சலில் ரூபா 70,016,000 தொகை என காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | நியமத்தின் பின்இணைப்பு 02 விரிவாக விளக்கமளித்தல் EG 6.2 பிரகாரம் செயற்பாட்டு தொழிற்பாடுகள் மூலமான காசுப் பாய்ச்சலின் ஆண்டிற்கான மிகைக்கு கடன் வட்டி செலவு ரூபா 8,612,223 தொகை மற்றும் வட்டி வருமானம் ரூபா 10,552,079 தொகைக்கான சீராக்கம் மேற்கொண்டு அதற்குரிய பணத்தின் மூலம் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட பெறுமதியை முதலீடுகள் மற்றும் நிதித் தொழிற்பாடுகளின் கீழ் வெவ்வேறாக காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ரூபா 654,000 தொகைக்கான 02 கணினிகள் மற்றும் ரூபா 1,162,710 தொகைக்கான அலுவலக உபகரணங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,816,710 தொகை மூலதன மானியங்கள் பெறுவனவு, மூலதன மானியங்கள் மற்றும் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படுவதற்கு பதிலாக செலவுகள் வரவு வைத்து திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நாட்குறிப்பு மூலம் சரி செய்து மூலதன மானிய கணக்கிற்கு சீராக்கல் செய்யப்படும் என. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 31,176,000 இற்கான கடன் தொகை ஏனைய மீண்டுவரும் செலவுகளுக்கான பெறுவனவுகளின் கீழ் வருமானம் ஒன்றென கணக்கீடு செய்தலை சரி செய்யும் போது குறிப்பிட்ட வருமானக் கணக்கு வரவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் இவ்வாறான வழுக்கல் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (இ) | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து மற்றும் சபை நிதியத்திலிருந்து நூலக கட்டிடத்திற்காக மீளாய்வாண்டின் போது மேற்கொண்டிருந்த ரூபா 80,763,837 இற்கான செலவொன்று மீண்டுவரும் செலவொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மூலதனச் செலவுகளுக்காக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளை அகற்றி அகழ்விரிவான வருமானம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஈ) | நூலக கட்டிடம் நிர்மாணிப்பதற்காக 2022 திசெம்பர் 31 திகதி வரை மேற்கொண்டிருந்த மொத்த கொடுப்பனவுகள் ஆகிய ரூபா 187,384,163 தொகை நடைமுறை வேலைகள் என ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அடுத்த வருடம் கட்டிடங்கள் மீள் மதிப்பீடு மேற்கொண்டு சொத்துக் கணக்கு சரியாக நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (உ) | உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் கடன் அடிப்படையில் வழங்கியிருந்த 5 கம்பெக்டர் வாகனங்களுக்காக கடந்த ஆண்டில் செலுத்தியிருந்த ரூபா 29,853,600 தொகைக்கான கடன் தவணைகளின் பெறுமதி மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு பதிலாக மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சொத்துக்களை மூலதனப்படுத்தும் போது முன்னைய ஆண்டுகளில் இருந்து பேணப்பட்டு வந்திருந்த மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை கணக்கிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஊ) | சபையினால் பழைய கணக்கு முறைப்படி மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை கணக்கின் மூலம் ரூபா 10,547,708 தொகைக்கான ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மூலதனப்படுத்தப்பட்டிருந்தமையால் அந்தக் கணக்கின் பெறுமதி அந்தத் தொகையினால் அதிகரித்திருந்தது. அவ்வாறு மூலதனப்படுத்தியிருந்த ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரண கணக்குகளில் ரூபா | எதிர் காலத்தில் செலவுகளில் இருந்து சொத்துக்களின் கிரயத்தை குறைக்காமல் நேரடியாக சொத்துக்கள் மூலதனப்படுத்தப்படும் என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 6,356,163 தொகைக்கான பெறுமதியொன்று களஞ்சிய வழங்களின் செலவொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (எ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு களஞ்சிய இருப்பில் அடங்கியிருந்த 03 வாகனங்களின் பெறுமதியாகிய ரூபா 27,433,329 தொகை களஞ்சிய இருப்பிலிருந்து அகற்றாமல் மீளாய்வாண்டின் வாகன மீள்மதிப்பீட்டின் போது அதன் பெறுமதி ரூபா 20,300,000 தொகை என பெறுமதி மதிப்பீடு செய்து ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக களஞ்சிய இருப்பின் பெறுமதி ரூபா 27,433,329 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நாட் குறிப்பொன்றின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஏ) | 2021 ஆண்டின் கணக்காய்வுக் கட்டணம் ரூபா 1,632,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன், மீளாய்வாண்டின் கணக்கீட்டுக் கட்டணத்திற்காக ஒதுக்கம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் 2020 ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் செலுத்தப்பட்டதுடன், 2021 ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் 2023 ஆண்டில் செலுத்தப்படும் என. | - மேற்படி - |
| (ஐ) | கடைகளை வாடகைக்கு கொடுத்தல், பொதுச் சந்தை கடை வாடகை மற்றும் இறைச்சிக் கடை டென்டர் வாடகை முற்பெறுவனவுகள் முறையே ரூபா 277,294 தொகை, ரூபா 160,644 தொகை மற்றும் ரூபா 8,376 தொகை பரிமாற்ற கொடுக்கல் வாங்கல்களின் மூலம் பெற வேண்டியவற்றிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தமையால் பெற வேண்டிய மீதி ரூபா 446,314 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் நிலுவை மற்றும் முற்பெறுவனவுகள் என வெவ்வேறாக காட்டப்படும் என. | - மேற்படி - |
| (ஒ) | மீளாய்வாண்டில் வேலைகள் பூர்த்தி செய்யப்படாத மற்றும் மின் பிரப்பாக்கியொன்று கொள்வனவு செய்வதற்கான 06 மூலதனச் செயற்திட்டங்களுக்குரிய கூட்டுத்தொகை ரூபா 107,634,195 தொகை நடைமுறை வேலை என மூலதனப்படுத்துவதற்கு பதிலாக மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் நடைமுறை வேலையின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஓ) | மீளாய்வாண்டின் போது 06 செயற்திட்டங்களுக்காக மத்திய அரசிலிருந்து கிடைத்திருந்த ரூபா 1,822,490 தொகைக்கான மூலதன மானியத்தில் 4 செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 1,155,002 தொகைக்கான திருத்த வேலைச் | 2023 ஆண்டின் நாட்குறிப்பின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | செலவுகள் செலவுகள் என கணக்கீடு செய்வதற்கு பதிலாக பாதைகள் மதகுகள் மற்றும் பாலங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஔ) | மீளாய்வாண்டின் போது 03 செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 116,424 தொகைக்கான மீண்டுவரும் செலவுகள் பாதைகள் மதகுகள் மற்றும் பாலங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (க) | மீளாய்வாண்டின் மூலதன மானியங்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 95,920 தொகைக்கான 6 செயற்திட்டங்களுக்கு மற்றும் 2021 ஆண்டில் ரூபா 11,865,351 தொகைக்கான 17 செயற்திட்டங்களுக்குரிய செயற்திட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி கடன் கொடுத்தோர் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | ஏதிர் காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ங) | மீளாய்வாண்டின் போது மூலதன மானியங்கள் என பெறுவனவுகள் மற்றும் 2022 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 37,229,894 தொகைக்கான மீதியும் உட்பட 2022 இல் மூலதன மானிய பெறுவனவுகளின் மொத்த பெறுமதி ரூபா 85,302,075 தொகை என காட்டப்பட்டு அகல்விரிவான வருமானம் கணக்கிடப்பட்டிருந்தமையால் அகல் விரிவான வருமானம் ரூபா 37,229,894 இற்கான தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட வருடத்திற்காக கிடைத்திருந்த மூலதன மானியங்கள் மாத்திரம் எதிர் காலத்தில் அகல்விரிவான வருமானத்திற்கு சீராக்கல் செய்யப்படும் என. | - மேற்படி - |
| (ச) | 2022 ஆண்டிற்கான வழங்குனர்களை பதிவு செய்வதற்கான பத்திரிகை விளம்பரத்துக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 125,310 தொகை மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்று என காட்டப்படாமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | தவறுதலாக திரண்டதிலிருந்து செலவிடப்பட்டிருந்தது என. | - மேற்படி - |
| (ஞ) | வள மீள் சுழற்சி நிலையத்தின் வேலைகள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 32,503,669 தொகை ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் கட்டிடங்களை மீள் மதிப்பீடு மேற்கொண்டு இந்த கட்டிடத்தை மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளின் படி 10 கணக்கு மீதிகளில் ரூபா 33,355,440 தொகைக்கான இணங்கியிருக்காத வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 239,992,014 தொகைக்கான 14 கணக்கு மீதிகள் பதிவேடுகள், அட்டவணைகள், நாட்குறிப்புக்கள் மற்றும் மீதியை உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நி.பி. 371(5) | 83 சந்தர்ப்பங்களில் சபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,259,142 தொகைக்கான துணைக் கட்டுநிதிகள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை. | இதுவரை தீர்க்கப்படாத முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | குறிப்பிட்ட விதிக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | (ii) நி.பி. 486 | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 880,169 இற்கான 54 மதிப்பளிக்கப்படாத காசோலைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மதிப்பளிக்கப்படாத கசோலை பதிவேட்டில் பத்து வருடங்களை விட பழமை வாய்ந்த மீதியொன்று தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| | (iii) நி.பி. 571 (2) | ரூபா 8,783,870 தொகைக்கான 2 வருடங்களை மிகைத்துள்ள | 02 வருடங்களை மிகைத்துள்ள | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 168 வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்காக உரிய பிரிவுகளில் இருந்து 2022 ஆண்டில் விசாரணை செய்தபோதும் அந்த வைப்புத் தொகைகள் தொடர்ந்தும் வைப்புப் பதிவேட்டில் வைக்கப்பட வேண்டும் என. | |
| | (iv) நி.பி. 880 | சபையின் சனசமூக நிலைய பொறுப்பாளர்கள் தவிர ஏனைய உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | பதிலளித்திருக்கவில்லை . | - மேற்படி - |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 ஆகஸ்ட் 24 திகதிய LGD/09/2019/(I) இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | சபையினால் முற்பணக் கணக்கு எல்லைகளை அங்கீகரித்து கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2021 ஜனவரி 22 திகதிய LGD/10A/4/ப.க/2019 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை<br>பந்தி 02 | சபையினால் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யும் போது தேறிய பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் ஒதுக்கங்கள் மற்றும் ஏற்பாடுகள் என தனியான நிரழ் ஒன்றின் கீழ் இனங் காணப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் மோட்டார் வாகனங்களின புத்தகப் பெறுமதியை அகற்றும் போது ஆதனங்களை அகற்றுதல் என ரூபா 268,070,274 தொகை மற்றும் மோட்டார் வாகனங்கள் மற்றும் கட்டிடங்களின் மீள்மதிப்பீடு ஆதனங்கள் கொள்வனவு செய்தல் என ரூபா 395,817,317 தொகை திரண்ட நிதியத்திற்கு வெவ்வேறாக சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரியாக நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2021 பெப்ரவரி 12 ஆம் திகதிய LGD/10A/4/ப.க/2019 இலக்கம் கொண்ட | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது நிலையான சொத்துக்கள் 14 வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட | தற்போது சபைக்கு சொந்தமான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு | குறிப்பிட்ட கடிதத்துக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதம் | வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றில் ரூபா 1,219,250 தொகைக்கான சொத்துக்கள் அந்த தொகுதிகளில் 9 தொகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன், கணினிகள் மற்றும் துணைக் கருவிகள், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என காட்டப்பட்டிருந்தது. | வருவதுடன், அடுத்த இறுதிக் கணக்குகளில் தொகுதிகளின் படி வேறாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 12,401,464 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 58,059,856 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பீட்டு வருமானம் | 2021 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 166,010 | 173,466 | 150,839 | 22,627 | 164,406 | 170,789 | 137,087 | 33,703 |
| (ii) | வாடகை | 96,552 | 72,777 | 71,667 | 1,110 | 77,082 | 49,692 | 37,058 | 12,634 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 16,722 | 16,861 | 16,851 | 10 | 13,812 | 14,479 | 14,495 | (17) |
| (iv) | ஏனைய வரு மானங்கள் | 932,912 | 739,011 | 730,397 | 8,614 | 694,977 | 593,808 | 682,842 | (89,034) |
| | மொத்தம் | 1,212,196 | 1,002,115 | 969,754 | 32,361 | 950,277 | 828,768 | 871,482 | (42,714) |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி மற்றும் வரி** | | |
| (I) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 2020 ஆண்டிற்கான பெற வேண்டிய களியாட்ட வரி ரூபா 138,510 தொகை சபையினால் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளித்திருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவீடு செய்து சலுகை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (II) | 2022 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு கொச்சிக்கடை உப அலுவலகத்தில் காணப்பட்ட நிலுவை வியாபார வரி ரூபா 3,067,661 தொகையிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 700 மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (I) | பெற வேண்டிய சந்தை வாடகை என 10 வருடங்களுக்கு முன்னர் இருந்து காணப்படும் நிலுவை மீதியாகிய ரூபா 1,018,536 தொகை தொடர்பாக தகவல்கள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளித்திருக்கவில்லை. | நிலுவை மீதிகளை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (II) | பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் பெற வேண்டியவற்றின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 1987 ஆண்டு முதல் காணப்படும் 3 வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பான 81 வீடுகளில் இருந்து பெற வேண்டிய வீட்டு வாடகை ரூபா 453,242 இற்கான மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| | 2022 ஜனவரி 31 திகதியில் உள்ளவாறு கொச்சிக்கடை உப அலுவலகத்தில் காணப்பட்ட நிலுவை வியாபார அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 1,842,561 தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 2,025 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் நிலுவை வருமானம் சேகரித்தலின் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2023.06.13 திகதி நடைபெறுவதற்கு தயார் செய்யப்பட்டிருந்த நிலுவையை அறவீடு செய்யும் கூட்டத்தின் பின்னர் இந்த விடயத்திற்காக பதில அனுப்பப்படும் என. | - மேற்படி - |
| **(எ)** | **வாடிவீட்டு வாடகை** | | |
| | 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது வாடிவீடு தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 2,100,313 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளித்திருக்கவில்லை. | - மேற்படி - |

**(ஏ) சாவிக் காசு**

| | | |
|---|---|---|
| 5 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படுகின்ற சாவிக் காசு ரூபா 5,838,059 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ரூபா 3,567,266 தொகைக்கான களஞ்சிய கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 2,781,165 தொகை 2018 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மீதியொன்றாக காணப்பட்டதுடன், அது மொத்த களஞ்சிய கடன்கொடுத்தோர் மீதியில் 78 சதவீதமென அவதானிக்கப்பட்டது. | பதில் அளிக்கப்படவில்லை. | கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1991 ஆண்டு முதல் காணப்படுகின்ற ஆதனங்களை தடை செய்யும் உத்தியோத்தர்கள் 7 பேரிடம் ரூபா 305,904 பெறுமதியிற்கான பிணை வைப்புத் தொகைக்குரிய நிலையான வைப்புக்களை விடுவித்து பலவின வைப்புக்களின் கீழ் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர் இருவரின் வைப்புத் தொகை மற்றும் வட்டித் தொகை சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | அந்த வைப்புக்கள் உரிய உத்தியோகத்தர்களுக்கு திருப்பி ஒப்படைப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2018 ஆண்டு பண்டக் கணிப்பீட்டு அகற்றுவதற்காக பரிந்துரைக்கப்பட்ட வாகனங்களில் 2 வாகனங்களின் பெறுமதி ரூபா 2,400,000 தொகை என மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்படவில்லை. | அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட வாகனங்களின் பெறுமதி ஏடுகளிலிருந்து அகற்ற வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மற்றும் நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 16,611,626 தொகைக்கான 7 சொத்துக்கள் கணக்காய்வுத் திகதி வரை பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | பதில் அளிக்கப்படவில்லை. | சொத்துக்கள் கொள்வனவு செய்யும் போது தேவையின் படி கொள்வனவு செய்ய வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நெட் ப்ளஸ் உதவித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட சூரிய பெனல் செயற்திட்டம் தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவின் பரிந்துரையின் படி ரூபா 31,800,000 இற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு விலைகூறல் வழங்கப்பட்டு இருந்ததுடன், 2022 மே 31 திகதி வரையில் இலங்கை மின்சார தனியார் கம்பனியில் இருந்து மின் தொடர்பு பெற்றுக் கொள்ளல் தவிர ஏனைய வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது என அறிவித்திருந்த போதிலும் 2023 மே 31 திகதி வரை செயற்திட்டம் செயற்படு நிலைமைக்கு ஆக்கியிருக்கவில்லை. | எதிர்பாரா விதமாக செலவுகள் அதிகரித்தமையால் கொடுப்பனவுகள் தாமதம் அடைந்ததால் எதிர்பார்த்த காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்தது என. | செயற்திட்டம் தொடர்பாக மேற்பார்வை ஒன்று மேற்கொண்டு செயற்திட்டத்தை செயற்படு நிலைமைக்கு மாற்ற வேண்டும். |
| (ஆ) | 2022 ஆண்டிற்காக ரூபா 9,276,007 தொகை செலவிடப்பட்டு மின் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (I) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.1.1, 2.5, 2.8.1 (ஆ) ஆகிய வழிகாட்டல்களை கடைபிடித்திருக்காமையால் 2022 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த 250W Sodium vapor bulb (screw) வகையை சேர்ந்த 250 மின்குமிழ்களுக்காக ரூபா 37,500 தொகையும் 37W-40W LED Screw bulb வகையான 1000 மின்குமிழ்களுக்காக ரூபா 25,000 தொகையும் மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்பட வேண்டும். |
| (II) | Trip Switch 30 A இற்காக 6 நிறுவனங்களில் இருந்து கூறுவிலைகள் அனுப்பப்பட்டிருந்ததுடன் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு உத்தரவாத காலத்தை விசாரணை செய்து இணக்கமொன்று மேற்கொண்டிருக்காமல் ஒரு விடயம் ரூபா 4,950 இற்காக கொள்வனவு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்ட போதிலும் 2022 ஆண்டில் இந்த விடயம் 01 ரூபா 4,750 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த ரூபா 4,750 விலை, கூறுவிலை அழைக்கப்பட்ட ஒரு நிறுவனத்தினாலும் சமர்ப்பிக்கப்பட்ட விலையாக காணப்படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப மட்ட 489 பதவிகளில் உள்ளவாறான பதவியணி 337 ஆகக் காணப்பட்டதுடன், வெற்றிடங்கள் 152 தொகையும், மிகை ஊழியர் ஒருவர் சேவையில் ஈடுபட்டிருந்தார். மேலும் தற்போது சேவையிலுள்ள 413 பேருக்கான பதவியணியில் பொது நிருவாக சுற்றறிக்கையின் படி சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 75 ஆகும். | சுட்டிக் காட்டிய வெற்றிடங்கள் காரணமாக இந்த நிறுவனத்தின் நாளாந்த கடமைகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் உள்ளூராட்சி ஆணையாளருக்கு பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், பல சந்தர்ப்பங்களில் வெளியிடப்பட்டிருந்த கடிதங்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் மூலம் ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தமையால் அதன் காரணமாக நிறுவனம் சார் வெற்றிடங்களை நிரப்பக் கூடிய சந்தர்ப்பம் இந்த நிறுவனத்திற்கு கிடைக்கவில்லை என. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையில் கடமையாற்றிய இறந்த உத்தியோகத்தர் 35 பேரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,720,116 இற்கான கடன் கடன்மீதியொன்று 7 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் தொடர்பாக ரூபா 32,740 கடன் மீதியொன்று மற்றும் சபையின் சேவையை விட்டுச் சென்றுள்ள 24 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,222,106 தொகை கடன் மீதியொன்றும் சபையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த 10 உத்தியோகத்தரிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 24,526 இற்கான கடன்மீதியொன்றும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | கடன் மீதிகள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | மீதியை அறவீடு செய்வதற்கு அல்லது பதவழிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்க வேண்டும். |